செ. கு. எண்: 306 நாள் : 24.11.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 24.11.2013

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், வடகாடு கிராமம் உட்கடை பெத்தேலபுரம் பாலம் அருகே, 30.10.2013 அன்று பெரியூர் கிராமம், நல்லூர் காடு பகுதியைச் சேர்ந்த திரு. பழனிச்சாமி என்பவரின் மகன் பாண்டி;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பசவன்னபுரம் கிராமம், தனி காப்புக் காட்டில் 1.11.2013 அன்று ஆருப்பள்ளி தரப்பு கொட்டபாளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியப்பா என்பவரின் மனைவி திருமதி வெங்கடம்மா;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், ஆண்டிக்காடு அருகே 6.11.2013 அன்று தேக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கையன் என்பவரின் மகன் நஞ்சப்பன்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஏரோடு அருகே 19.11.2013 அன்று தேவாலா கிராமத்தைச் சேர்ந்த திரு. கதிர்வேல் என்பவரின் மனைவி திருமதி நல்லம்மாள் என்கிற தெய்வானை;

–– ஆகியோர் காட்டு யானைகள் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஓவேலி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரது மகன் விஸ்வலிங்கம் 16.11.2013 அன்று காட்டெருமை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 18.11.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த பாண்டி, வெங்கடம்மா, நஞ்சப்பன், நல்லம்மாள் என்கிற தெய்வானை மற்றும் காட்டெருமை தாக்கியதில் அகால மரணமடைந்த விஸ்வலிங்கம் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9